**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.**

**(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)**

**சி.சி. எண் : 204/2015**

**அ.சா. : 2**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. அருண்ராஜ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | ராமமூர்த்தி |
| ஊர் | : | திருவயலூர் |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | தனியார் நிறுவனம் (ஜியோ) |
| மதம் | : | |
| வயது | : | 33 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 15.11.2022**

**முதல் விசாரணை:**

நான் தற்போது போச்சம்பள்ளியில் உள்ள திருவயலூரில் வசித்து தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தந்தை. கடந்த 22.08.2015 ஆம் தேதி மாலை சுமார் 06.00 மணிமுதல் 07.00 மணியளவில் வழக்கம் போல ஆடுகளை நானும், எனது பெற்றோரும் எங்கள் வீட்டருகே ஆடுகளை பிடித்து அடைக்கும்போது ஒரு ஆடு காணாமல் போய்விட்டது. அப்போது எங்களிடம் மொத்தம் 18 ஆடுகள் இருந்தன, அன்றைய தினம் ஒரு ஆடு மட்டும் காணாமல் போனது. எங்கள் வீட்டருகே பல இடங்களில் தேடிப்பார்த்தோம் கிடைக்கவில்லை. அன்றைய தினம் சனிக்கிழமை மறுநாள் ஞாயற்றுக்கிழமை போச்சம்பள்ளி சந்தையில் எங்கள் ஆட்டை யாராவது திருடி வந்தது விற்பனைக்கு வைத்துள்ளார்காள என்று நானும் எனது அப்பாவும் சந்தைக்கு வந்து தேடினோம்.

சந்தைக்கு எனது மாமா பெரியண்ணன் என்னுடைய பெரியப்பா மகன் குமரேசன், மற்றொரு மாமா கோவிந்தராஜ் ஆகியோர் சந்தைக்கு ஆடு வாங்குவதற்காக வந்திருந்தார்கள். அப்போது சந்தையில் ஒரு நபர் எங்கள் ஆட்டை வைத்திருந்தார். அவரை விசாரித்த போது அவர் பெயர் முத்துவேல், போச்சம்பள்ளி என்று சொன்னார்.

அவரிடம் எங்கள் ஆட்டை இரண்டு பேர் சேர்ந்து கொடுத்ததாக சொன்னார்.

( நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள மூன்று எதிரிகளில் முத்துவேல் என்ற எதிரியை பார்த்து அவர்தான் ஆட்டை வைத்திருந்ததாக சாட்சி கூறினார். ) முத்துவேலிடம் அவரிடம் ஆட்டை கொடுத்த மற்ற இரண்டு பேரையும் போன் மூலம் சந்தைக்கு வரவழைக்குமாறு கூறினோம். முத்துவேல் போன் மூலம் இருவரையும் வரச்சொன்னார். சுமார் 1/4 மணி நேரத்தில் இரண்டு நபர்கள் முத்துவேலை அழைத்து வந்தார்கள். அந்த இரு நபர்களிடம் எங்கள் ஆடு அவர்களிடம் வந்தது என்று கேட்டோம். அவர்கள் இருவரும் முன்னுக்கு பின் முரணாக பதில் சொன்னார்கள். நாங்கள் இருவரையும் காவல் நிலையத்திற்கு வருமாறு அழைத்தோம். அவர்கள் வர மறுத்தனர். எங்களுடன் இருந்தவர்கள் மற்றும் அருகில் இருந்தவர் துணையுடன் காவல் நிலையம் அழைத்து சென்றோம்.

காவல் நிலையம் அருகே வந்த போது முத்துவேல் தவிர மற்ற இரு நபர்களும் எங்களிடமிருந்து தப்பிவிட்டனர். அருகில் இருந்தவர்கள் அனைவரும் சேர்ந்து தப்பி சென்ற இருவரையும் போச்சம்பள்ளி அரசு மருத்துவமனை அருகே ஓடிசென்று பிடித்தோம். பின்னர் மூவரையும் போச்சம்பள்ளி காவல் நிலையம் அழைத்து சென்றோம். ( நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள மற்ற இரு எதிரிகள்தான் தங்களிடமிருந்து தப்பிய நபர்கள் என சாட்சி அடையாளம் காட்டினார்.)

ஆட்டையும் காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றோம். இது குறித்து எனது தந்தை போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**1)** ஆட்டை மூன்றாம் நபர் வாங்கிய பிறகு நாங்கள் ஆட்டை பிடித்தோம் என்றால் நாங்கள் பார்க்கும் போது ஆட்டை முத்துவேல் என்ற நபர் வைத்திருந்தார். அவர் மேற்படி ஆட்டிற்கு விற்பனை தொகையை கொடுக்கவில்லை என்று சொன்னார். மூன்றார் நபர் மேற்படி ஆட்டை வாங்கிய நபரா, வைத்திருந்த நபரா என்று எங்களுக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். 1 எதிரிதான் வைத்திருந்தார்.

2) 2, 3 எதிரிகள் ஹோண்டா இரு சக்கர வாகனத்தில் போச்சம்பள்ளி சந்தைக்கு வந்தார்கள். போச்சம்பள்ளி அரசு மருத்துவமனை அருகே 2,3 எதிரிகள் தப்பி சென்ற

போது பிடித்தோம். அவர்களை யார் பிடித்தார்கள் என்றால் எனது மாமா குமரேசனும் பெரியண்ணனும் பிடித்தார்கள். காவல் நிலையத்தில் நான் மாலை 04.00 மணி வரை இருந்தேன். என்னிடம் எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்று எனக்கு ஞாபகம் இல்லை. போலீசார் எதிரிகள் மூவரையும் காவல் நிலையத்தில் விசாரணை செய்தார்கள். நானும் எனது அப்பாவும் உடன் இருந்தோம். அந்த ஆடானது எங்களது ஆடு என்பதற்கு ஏதாவது ஆதாரம் ஒப்படைத்தோமா என்றால் மேற்படி ஆட்டின் இரண்டு காதுகளும் அறுத்த மாதிரி இருக்கும்.

3) பொதுவாக ஆடு வளர்ப்பவர்கள் ஆட்டின் காதை வெட்டிவிடுவார்கள் என்று சொன்னால் சரிதான். ஒரு ஆட்டின் காது வெட்டப்பட்டிருப்பதால் அந்த ஆடு எங்கள் ஆடு என்று உரிமை கொண்டாடுகிறோம் என்று சொன்னால் நாங்கள் வளர்த்ததால் அந்த ஆட்டை பற்றி நன்றாக தெரியும். ஆட்டை பொறுத்து ஆதாயம் அடைய வேண்டும் என்பதற்காக எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வேறு ஒரு நபரின் ஆட்டை எங்கள் ஆடு என பொய்யாக அடையாளம் காட்டி பொய் புகார் கொடுத்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வது போல் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால்சரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளைத்தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றும் எவ்வித சங்கதிகளையும் நான் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. தகப்பனார் கொடுத்த பொய் புகாரை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 204/2015**

**அ.சா. : 3**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. பெரியண்ணன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | நடேசன் |
| ஊர் | : | கோணனூர் |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | விவசாயம் |
| மதம் | : | |
| வயது | : | 50 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 15.11.2022**

**<u>முதல் விசாரணை</u>:**

நான் தற்போது கோணனூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 மற்றும் அ.சா.2 எனக்கு தெரிந்த நபர்கள். தூரத்து உறவினர்கள். கடந்த 23.08.2015 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 06.00 மணியளவில் நானும் எனது உறவினர் குமரேசனும் போச்சம்பள்ளி ஆட்டுச் சந்தைக்கு சென்றிருந்தோம். அப்போது அ.சா.1 மற்றும் அ.சா.2 வந்திருந்தார்கள். அப்போது அ.சா.1 அவருடைய ஆடு ஒன்ற காணாமல் போனதாக சொன்னார். அந்த ஆட்டை சந்தையில் விற்க வந்த நபர் வைத்திருந்ததாகவும் அதை பிடித்துவிட்டதாகவும் அ.சா.1 என்னிடம் சொன்னார்.

அப்போது ஆட்டை சந்தையில் விற்க வந்த நபரை பார்த்தேன். ( தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள முத்துவேல் என்ற மணிவேல் என்ற எதிரியை காட்டி அவர்தான் ஆட்டை வைத்திருந்ததாக சாட்சி அடையாளம் காட்டினார். ) அப்போது முத்துவேல் ஆட்டை இரண்டு நபர்களிடம் இருந்து வாங்கியதாக சொன்னார். அப்போது முத்துவேலையும் அந்த இரண்டு நபர்களையும் போன்

மூலம் வரவழைக்குமாறு சொன்னோம். முத்துவேல் போன் செய்த பிறகு இரண்டு நபர்களும் சுமார் 1/4 மணி நேரத்தில் வந்து விட்டார்கள். (நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள மற்ற இரண்டு எதிரிகளை காட்டி அவர்கள் தான் முத்துவேல் போன் செய்து வரவழைத்த நபர்கள் என்று சாட்சி அடையாளம் காட்டினார்.)

மூன்று நபர்களையும் அழைத்துக்கொண்டு போச்சம்பள்ளி காவல் நிலையத்திற்கு செல்லலாம் என ஆட்டுடன் அழைத்து சென்றோம். அப்போது முத்துவேல் தவிர மற்ற இரண்டு நபர்கள் செல்லும் வழியிலேயே தப்பி சென்றனர். உடனிருந்த நாங்கள் அனைவரும் சேர்ந்து தப்பி சென்ற இருவரையும் துரத்தி பிடித்து மூவரையும் சேர்த்து ஆட்டுடன் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம்.அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். என்னிடம் காட்டப்படும் முனீஸ்வரன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது. **அந்த கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த கையொப்பத்தை போச்சம்பள்ளி காவல் நிலையத்தில் எதிரிகளை ஆட்டுடன் ஒப்படைத்த பிறகு போட்டுக்கொடுத்தேன். சாட்சிக்காக மேற்படி கையொப்பத்தை வாங்கினார்கள்.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

புகார் கொடுத்த பிறகு எதிரிகளை போலீசார் விசாரித்தார்களா என்றால் எதிரிகளை காவல் நிலையத்தில் ஒப்படைத்த பிறகு நான் வெளியே வந்துவிட்டேன். அங்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. எதிரிகளை விசாரணை செய்த போது 2 ஆம் எதிரி எதிரிகள் மூவரும் சேர்ந்து ஆட்டை திருடியதாக குற்றத்தை ஒப்புக்கொண்டார் என்றும் அதற்கு சாட்சியாக நான் கையெழுத்து போட்டேன் என்று சொன்னால் சரிதான். எனது முன்னிலையில்தான் 2 ஆம் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்று

சொன்னால் சரிதான்.

<u>**2 வது எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

ராமமூர்த்தி புகார் கொடுத்த பிறகு காவல் நிலையத்தில் என்ன நடந்தது யார் யாரை விசாரணை செய்தார்கள் எதற்காக விசாரணை செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. கையெழுத்து செய்த பேப்பரில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுகொண்டதற்கு இணங்க கையெழுத்து செய்தேன். காவல் நிலையத்தில் இருந்து வெளியே வந்த பிறகு போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை. **(1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது. 3 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. 3 வது எதிரிக்கு போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரண செய்யப்படவில்லை அதனால் 3 வது எதிரி தரப்பிலும் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)**

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சுருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN

District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 204/2015**

**அ.சா. : 4**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. குமரேசன் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | நாராயணன் |
| ஊர் | : | கோணனூர் |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | விவசாயம் |
| மதம் | : | |
| வயது | : | 47 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 15.11.2022**

**<u>முதல் விசாரணை</u>:**

**1)** நான் தற்போது கோணனூரில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 முதல் 3 வரையிலானவர்கள் எனது உறவினர்கள். கடந்த 23.08.2015 ஆம் தேதி காலை 06.00 மணியளவில் போச்சம்பள்ளி சந்தைக்கு ஆடு வாங்குவதற்காக நானும், அ.சா.3 சென்றிருந்தோம். அப்போது அ.சா.1 மற்றும் அ.சா.2 அவர்களுடைய ஆடு காணாமல் போனதாகவும், தேடிப்பார்க்க வந்ததாகவும் சொன்னார்.

2) அப்போது அவர்களுடைய ஆட்டை தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் எதிரி முத்துவேல் வைத்திருந்ததை பார்த்து அ.சா.1 ஆட்டை அடையாளம் காட்டி முத்துவேலையும், ஆட்டையும் காட்டி முத்துவேலை பிடித்தோம். அப்போது முத்துவேலை விசாரித்த போது அவர் ஆட்டை இரு நபர்களிடம் வாங்கியதாக சொன்னார். அந்த நபர்களை வரவழைக்குமாறு சொன்ன போது சுமார் 1/4 மணி நேரத்தில் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள மற்ற இரண்டு எதிரிகளும் சந்தைக்கு வந்தார்கள்.

3) பிறகு ஆஜர் எதிரிகள் மூவரையும் ஆட்டுடன் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தோம். அ.சா.1 இது குறித்து புகார் அளித்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது. (அந்த கையொப்பத்தை போலீசார் ஆஜர் எதிரிகளின் நடுவில் இருக்கும் முனீஸ்வரன் என்ற எதிரியிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றபோது பெற்றதாக சாட்சி அடையாளம் காட்டினார். ) அப்போது 2 மற்றும் 3 எதிரிகள் ஆட்டை திருடியதாக கூறினார். போலிசார் என்னை விசாரித்தார்கள். ( ஒப்புதல் வாக்குமூலத்தில் 2, 3 எதிரிகள் ஆட்டை அ.சா.1 ன் வீட்டருகே ஆட்டை திருடி இரு சக்கர வாகனத்தில் எடுத்து சென்றதாக கூறினார்கள். 2, 3 எதிரிகள் மேற்படி ஆட்டை சந்தையில் எடுத்து வந்து 1 ஆம் எதிரியிடம் விற்று சென்றதாக சொன்னார்கள்.) **ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி மட்டும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**<u>2 எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

**1)** ஆட்டை யாரிடம் விற்றார்கள் என்றால் முத்துவேல் என்ற எதிரியிடம் விற்றுள்ளார்கள். ஆட்டை வாங்கியவரிடமிருந்து ஆட்டை நாங்கள் பிடித்தோம் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் 2,3 எதிரிகள் 1 வது எதிரியிடம் ஆட்டை கொடுத்ததாக சொன்ன பிறகு நான் காவல் நிலையத்தில் இருந்து வெளியே வந்தேன். காவல் நிலையத்தில் நான் ஒரு கையெழுத்து மட்டும்தான் செய்தேன். அதன் பிறகு என்னை போலீசார் விசாரணை செய்யவில்லை. நான் சொல்வது போல் 2 வது எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2) நான் தற்போது போலீசார் சொன்னதின் பேரில் சாட்சியம் அளிக்க வந்தேன் என்று சொன்னால் சரியல்ல. நடந்த விவரத்தைதான் சாட்சியம் அளித்தேன். அ.சா.1 எனது உறவினர் ஆவார். அ.சா.1 இடம் எனக்கு அழைப்பாணை வந்ததை சொன்னேன். அவர் நடந்த விவரங்கள் சொல்ல சொன்னார். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளைத்தான் போலீஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அ.சா.1 எனது உறவினர் என்பதால்

பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. **(1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது. 3 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. 3 வது எதிரிக்கு போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரண செய்யப்படவில்லை அதனால் 3 வது எதிரி தரப்பிலும் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)**

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.

**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், போச்சம்பள்ளி.</u>**

**<u>(அத்தியாயம் XXII குற்றவியல் விசாரணை நடைமுறைச் சட்டம்)</u>**

**சி.சி. எண் : 204/2015**

**அ.சா. : 5**

| | | |
|---|---|---|
| பெயர் | : | திரு. கோவிந்தராஜ் |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | முருகன் |
| ஊர் | : | திருவயலூர் |
| வட்டம் | : | |
| ஜாதி | : | |
| தொழில் | : | ஓட்டுனர் |
| மதம் | : | |
| வயது | : | 55 |

**1873 ஆம் ஆண்டின் மெய்யுறுதி சட்டத்தின் படி கீழ்க்கண்ட சாட்சிக்கு மெய்யுறுதி செய்து வைக்கப்பட்டது. நாள். 15.11.2022**

**<u>முதல் விசாரணை</u>:**

1) நான் தற்போது திருவயலூரில் வசித்து ஓட்டுனராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்கள் எனது உறவினர்கள். கடந்த 23.08.2015 ஆம் தேதி நான் ஆடு வாங்குவதற்காக போச்சம்பள்ளி சந்தைக்கு சென்றிருந்தேன். அப்போது அ.சா.1 மற்றும் அ.சா.2 அவர்கள் ஆடு காணாமல் போனதாகவும், அதை யாராவது சந்தைக்கு விற்க கொண்டுவந்துள்ளார்காள என்று பார்ப்பதற்கு வந்ததாகவும் சொன்னார்கள். காலை 06.00 மணியளவில் அப்போது ஆட்டையும், ஆட்டை கொண்டு வந்த ஆட்களையும் பிடித்து விட்டதாக சொன்னார்கள். ஆட்டையும் ஆட்டை திருடிய நபர்களையும் சந்தையில் இருந்து காவல் நிலையத்திற்கு அழைத்து செல்வதாக சொன்னார்கள். அப்போது நானும் காவல் நிலையம் செல்வதற்காக காவல் நிலையம் சென்றேன். நானும் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலானவர்களும் மமற்றும் அருகில் இருந்தவர்களும் ஆஜர் 2 மற்றும் 3 எதிரிகளை காவல் நிலையத்திற்கு அழைத்து சென்றோம். அப்போது அவர்கள் இருவரும் காவல்

நிலையம் அருகே சென்ற போது தப்பி ஓடினார். உடன் சென்றவர்களும், அருகில் இருந்தவர்களும் சேர்ந்து இருவரையும் விரட்டி பிடித்தோம். இருவரையும் காவல் நிலையத்தில் ஒப்படைத்தோம். அ.சா.1 காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2,3 எதிரிகள் தப்பி ஓடிய பிறகு அரசு மருத்துவமனை போச்சம்பள்ளி அருகே வைத்து பிடித்தோம். அவர்களை யார் பிடித்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. அதற்கு பின்னிட்டு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. போலீசார் விசாரணையின் போது எதிரிகளை மருத்துவமனை அருகே பிடித்ததாக சொன்னேன். ஆடு திருடிகொண்டு போனதாக சொல்லும் வாகனத்தை பற்றி எதுவும் தெரியாது. சம்பவதன்று காலை 10.00 மணிக்கு விசாரித்த பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றும், நான் வாக்குமூலம் தரவில்லை என்று சொன்னால் சரியல்ல. அ.சா.1 கொடுத்த தவறான புகாருக்கு நான் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2,3 எதிரிகளை யாரும் பிடிக்கவில்லை என்றும் காவல் நிலையத்தில் ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**(1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது. குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது. 3 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. 3 வது எதிரிக்கு போதிய வாய்ப்பு கொடுத்தும் குறுக்கு விசாரண செய்யப்படவில்லை அதனால் 3 வது எதிரி தரப்பிலும் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)**

சாட்சி கூறியதை என்னால் தட்டச்சருக்கு
கூறப்பட்டு சாட்சியின் முன் சாட்சிக்கு படித்து
காட்டி சாட்சியால் படிக்கப்பட்டு, சரியென
ஒப்புக்கொண்டார்.

S V SHANMUGANATHAN
District Munsif cum Judicial Magistrate
Digitally signed by S V SHANMUGANATHAN
Location: Pochampalli

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நடுவர், போச்சம்பள்ளி. கிருஷ்ணகிரி மாவட்டம்.